**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**DVC. No. 24/2026**

**28.04.2026**

**திரு. காசிநாதன், த/பெ. இரத்தினசபாபதி**

PW : 2

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என் மகளுடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் இல்லை என் மகள் தான் என் வீட்டில் வந்து சுமார் 1 ½ வருடமாக வாழ்ந்து வருகிறாள். என்னுடைய வீடு மருதப்பட்டினத்தினத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் LIC Agent ஆக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். LIC மூலம் எனக்கு பணம் வந்து கொண்டிருக்கிறது என்றால் பாலிசி பிடித்தால் தான் வரும் தற்போது எதுவும் இல்லை. எனக்கு ஒரு மகன் இருக்கிறார். என் மகன் குவைத் நாட்டில் இருக்கிறார். தற்சமயம் என் மகளுக்கு நான் செலவுகளை பார்த்து வருகிறேன். என் மகளின் திருமணத்தின்போது என் மருமகன் வெளிநாட்டில் இருந்தாரா என்றால் இருந்ததாக சொன்னார்கள். வெளிநாட்டில் வேலையில் இருந்ததால் என் மகளை அவருக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல.

திருமணத்திற்கு பிறகு எனது மருமகன் வெளிநாட்டில் 2 வருடம் இருந்தார். அப்போது எனது மருமகன் கொடுத்த தொகையை வைத்துகொண்டு என் மகள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தாள் என்றால் சரியல்ல. என் மகள் மாமியாருடன் தான் இருந்து வந்தாள். என் மருமகன் வெளிநாட்டில் அரசு வேலையில் இருந்தாரா அல்லது தனியார் வேலையில் இருந்தாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனது மருமகன் போதுமான அளவு பொருளாதார உதவி செய்தும், பற்றாக்குறைக்கு அக்க பக்கத்தில் கடன் பெற்றும் என் மகளிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரரையும், குழந்தைகளையும் வைத்துக்கொண்டு எதிர்மனுதாரர் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார் என்றால் அது தவறு.

என் மகள் எதிர்மனுதாரரை விட அதிகம் படித்துள்ளதால் என் மருமகனுடன் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு என் வீட்டிற்கு வந்து தங்குவாள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்த குடும்ப வன்முறையில் ஈடுப்படவில்லை என்றாலும், என் மகளுக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வன்முறையில் ஈடுப்பட்டார். என் மருமகன் வன்முறையில் ஈடுப்பட்டிருந்தால் தான் அது சம்பந்தமாக போலிசாரிடம் புகாரோ அல்லது மருத்துவ சான்றோ தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு அவர்

எந்த வன்முறையிலும் ஈடுப்படவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் கொடுத்த புகாரிலேயே அவர் வேலைக்கு போவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அது தையல் கடைக்கு சாதாரணமாக போகும் வேலை ஆகும். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எதிர்மனுதாரரின் சகோதரி மற்றும் சகோதரரும் சமாதானம் பேச அழைத்தும் நான் சமாதானத்திற்கு வரவில்லை என்றால் சமாதானம் செய்து அழைத்து சென்று அடுத்த 15 நாட்களில் அடித்து துரத்திவிட்டார்கள். அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் மகளுக்கு எனது மருமகனுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றால் சரியல்ல. என் மருமகன் மீது கோபத்தின் காரணமாக அதிகம் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மருமகன் எனது மகளுடன் சேர்ந்து வாழ மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன். அந்த வழக்கில் நான் மகள் தரப்பில் சாட்சியாக உள்ளேன் என்றால் சரியல்ல. என் மகளுக்கு மருமகனுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதால் இந்த மனு நிராகரிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.04.28 05:30:08 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்